2008 ஏப்ரல் 11]

அதை வேளாண்மைப் பல்கலைக்கழகம், 'சபாஷ்' என்று பாராட்டு தெரிவித்தால், விருதுகள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதி விவசாயிகளையும் சென்றடையக்கூடிய வகையில், குறுகிய காலப் பயிர் பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சி ஆகியவற்றை விவசாயிகளுக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நன்னிலம் தொகுதியைச் சேர்ந்தவர். அவரே அந்தப் பிரச்சாரத்திலே ஈடுபட்டு விவசாயிகளை ஊக்குவிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

94—

மாணவர் விடுதி

38429-திரு. அ. தமிழரசு:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் புதிய விடுதி தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

[2008 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு அ. தமிழரசு.

திரு அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர், தாலுகா தலைமையிடம். ஓமலூர் பேரூர் பகுதியிலே அரசு மேல்நிலைப் பள்ளியிலே 1,400 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். தனியார் அரசு நிதி உதவி பெறும் பள்ளியிலே 1,700 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். அந்தப் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்ற பகுதி. மாணவர்கள் பள்ளிக்கு வர இயலாத காரணத்தால், பள்ளிப் படிப்பை முடித்துக்கொள்ள வேண்டிய ஒரு நிலை இப்போது இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய பள்ளி மாணவர்களின் நலன் கருதி, அங்கே மாணவர் விடுதி ஒன்றைத் தொடங்குவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னிடம் தனியாகவும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியினுடைய தேவையை நானும் புரிந்து வைத்திருக்கின்றேன். எதிர்காலத்திலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிவோடு இந்த அரசாங்கம் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு அ. தமிழரசு.

திரு அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டிலே அதைத் தொடங்குமாறு பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு ப. டில்லி பாபு.

திரு ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக எத்தனை விடுதிகள் இருக்கின்றன? எனது தொகுதியான அரூர், ஊத்தங்கரை பகுதிகளில் 20 ஆயிரம் மாணவர்கள் அரசு உயர்நிலைப்

2008 ஏப்ரல் 11]

பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற நிலையில், அங்கே வெறும் 500, 600 மாணவர்களுக்கு மட்டுமே விடுதி வசதி இருக்கின்றது. விடுதியை நிரப்புகின்ற காலகட்டத்திலே பல நூறு மாணவர்களுக்கு விடுதி கிடைக்காமல், தமது பள்ளிப் படிப்பை நிறுத்தக்கூடிய நிலைமைக்குத் தள்ளப்படுகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக நான் அறிய விரும்புவது, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் விடுதிகளில் இடம் கிடைக்காத மாணவர்களுக்கு வரும் கல்வியாண்டிலாவது கூடுதலாக விடுதிகள் ஏற்படுத்துவதற்கு தமிழக அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் 1,181 விடுதிகள் தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அவர்களுடைய தொகுதிக்கு புதிதாக விடுதிகள் வேண்டுமென்று கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். இந்த நிதியாண்டிலே 25 புதிய விடுதிகள் தொடங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். நமது சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் மீண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, எதிர்காலத்திலே நிறைய விடுதிகளைத் தொடங்குவதற்கு வேண்டிய வழிவகைகளை நான் செய்வேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு ம. குணசேகரன்.

திரு ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மானாமதுரை தொகுதியில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்று இருக்கின்றது. அங்கே 1,400-க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகள்தான் அங்கே அதிகம் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அங்கே ஒரே ஒரு ஆதி திராவிடப் பெண்கள் விடுதி மட்டுமே இருக்கின்றது. அதிலேயும் 50 மாணவிகள் மட்டுமே தங்கிப் படிக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2008 ஏப்ரல் 11

முற்பகல் 10-00

அதேநேரத்தில், அங்கே 12 பிற்படுத்தப்பட்ட மாணவிகள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். எனவே, 1,400 பேர் படிக்கின்ற அந்தப் பள்ளிக்குச் செல்கின்ற மாணவிகள் வெகு தொலைவிலிருந்து வருகின்ற நிலையில், மழைக் காலங்களிலும், வெயில் காலங்களிலும் அந்தப் பள்ளிக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. குறிப்பாக, அந்தப் பள்ளி அரசுப் பள்ளியாக இருந்தாலும் சுமார் 85 விழுக்காட்டுக்கு மேல் அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவிகள் தேர்ச்சி பெறுகின்றார்கள். எனவே, அந்த மாணவிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு, அங்கே மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மாணவிகளுக்கான ஒரு விடுதியைத் தொடங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னதைப்போல, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதியிலே, உண்மையான தேவையை என்னிடத்திலே சொல்லி இதுபோன்ற விடுதிகளைக் கேட்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலே அந்தக் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு எந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமோ அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கி ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

95—

அர்ச்சகர் பயிற்சி நிலையம்

***29455—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—